الدرس الثاني

## قصة الخلق

பாடம் - 2

## படைப்பின் வரலாறு

மனித இனத்தின் தந்தை ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்ததிலிருந்து மனித இனத்தின் வரலாறு துவங்குகிறது. ஆதமை அல்லாஹ் களிமண்ணிலிருந்து படைத்தான். பிறகு அவருள் தன்னுடைய உயிரை ஊதினான். அனைத்துப் பொருட்களின் பெயர்களையும் அவருக்குக் கற்றுக்கொடுத்தான். மேலும் அவருக்கு கூடுதல் கண்ணியத்தையும் மரியாதையையும் கொடுப்பதற்காக அவருக்கு சிரம்பணியும்படி வானவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அனைவரும் ஆதமுக்கு சிரம்பணிந்தார்கள் இப்லீஸைத் தவிர. அவன் ஆதமின் மீது பொறாமை கொண்டு அக்கட்டளையை மறுத்தான். ஆணவம் கொண்டான். அதனால் அல்லாஹ் இப்லீஸை வானத்திலிருந்து கீழே இறக்கினான். அவனை இழிந்தவனாக, இறையருளை இழந்தவனாக அங்கிருந்து வெளியேற்றினான். மேலும் அல்லாஹ் இப்லீஸை சாபத்திற்கும் துர்ப்பாக்கியத்திற்கும் நரகத்திற்கும் உரியவனாக ஆக்கினான்.

இப்லீஸ் தனது இறைவனிடம் மறுமை நாள் வரை தனக்கு அவகாசம் அளிக்கும்படி வேண்டினான். அவ்வாறே அல்லாஹ்வும் அவனுக்கு அவகாசம் அளித்தான். அதன்படி இப்லீஸ் ஆதமின் வழித்தோன்றல்கள் (மனிதர்கள்) அனை வரையும் வழிகெடுக்கப்போவதாக சத்தியம் செய்தான்.

அதன் பிறகு அல்லாஹ் ஆதமிலிருந்து அவருடைய துணைவி ஹவ்வாவைப் படைத்தான்- ஆதம் அவளிடம் அமைதியும் அன்பும் பெறவேண்டும் என்பதற்காக. மேலும் அவ்விருவரும் சொர்க்கத்தில் தங்கும்படி கட்டளையிட்டான். அந்த சொர்க்கத்தில் எந்த மனிதனின் கற்பனைக்கும் எட்டாத அருட்பேருகள் உள்ளன.

மேலும் இப்லீஸ் அவ்விருவருக்கும் விரோதி ஆவான் என்பதையும் அல்லாஹ் தெரிவித்தான். பிறகு அல்லாஹ் அவர்களை சோதிப்பதற்காக சுவனத்தின் மரங்களில் ஒன்றை புசிக்கக் கூடாது எனத் தடுத்தான். ஆனால் இப்லீஸ் அவர்களைக் குழப்பினான். அம்மரத்திலிருந்து புசிப்பதை அவர்களுக்கு அழகாகக் காட்டினான். மேலும் இது விஷயத்தில், தான் அவர்களுக்கு நலமே நாடுவதாக ஆணை யிட்டுக் கூறினான். நீங்கள் இருவரும் இம்மரத்திலிருந்து புசித்தால் இந்த சொர்க்கத்தில் நிரந்தரமாகத் தங்கி வாழ் வீர்கள் என்று அவன் சொன்னான். இவ்வாறு தொடர்ந்து அவர்களிடம் கூறி இறுதியில் அவர்களை வழிகெடுத்தான். பிறகு அவர்கள் இருவரும் அம்மரத்திலிருந்து புசித்து தம் இறைவனின் கட்டளைக்கு மாறுசெய்தனர்.

அதன் பிறகு அவ்விருவரும் தாங்கள் செய்தவற்றிற்கு மிகவும் வருந்தினார்கள். தங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோரினார்கள். அல்லாஹ் அவ்விருவரையும் மன்னித்தான். ஆனாலும் அவர்களை சுவனத்திலிருந்து பூமிக்கு இறக்கி னான். ஆதமும் அவரது மனைவியும் இப்புவியில் தங்கி வாழ்ந்தனர். அல்லாஹ் அவர்களுக்கு சந்ததிகளை வழங்கினான். அவர்கள் பல குலங்களாகவும் கோத்திரங்களாகவும் இன்று வரை பல்கிப் பெருகி வருகின்றனர்.

இப்லீசும் அவனுடைய சந்ததிகளும் ஆதமின் சந்ததி யினருடன் தொடர்ந்து மோதிக் கொண்டே வருகின்றனர். காரணம் ஆதமின் சந்ததியினர் மறுமையில்

நரகத்திற்குச் செல்ல வேண்டுமென்ற ஆவலில் இப்லீஸ் அவர்களை நேர்வழியில் செல்வதை விட்டும் நன்மைகளைச் செய்வதை விட்டும் தடுத்து, தீமைகளை அவர்களுக்கு அழகாகக்காட்டி இறைவனின் திருப்பொருத்தத்தை விட்டும் அவர்களை தூரமாக்கிட வேண்டும் என்பதற்காக.

ஆனால் அல்லாஹ் மனிதர்களை வீணாக விட்டுவிட வில்லை. மாறாக சத்தியத்தை அவர்களுக்கு போதிப்பதற்காகவும் அவர்களுக்கு எதில் வெற்றியும் விடுதலையும் இருக்கிறதோ அதன்பால் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் இறைத்தூதர்களை அனுப்பி வைத்தான்.

ஆதம்(அலை)மரணித்த பிறகு அவருடைய சந்ததியினர் பத்து நூற்றாண்டுகளாக ஒரே இறைவனையே வணங்கி வழிபட்டு வந்தனர். பிறகு அவர்களிடம் ஷிர்க்-இணை வைப்பு ஏற்பட்டு அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத வர்களையும் வணங்கும் நிலை உருவானது. மக்கள் சிலைகளை வணங்கத் தொடங்கினர். உடனே அல்லாஹ் நூஹ்(அலை) அவர்களை முதன் முதலில் இறைத்தூதராக அனுப்பி வைத்தான். அவர் அல்லாஹ்வை வணங்கும்படியும் சிலைவணக்கத்தை விட்டுவிடுமாறும் மக்களை அழைத்தார்.

அதன் பிறகு இஸ்லாத்தின் பக்கம் - அதாவது அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அவனை விடுத்து மற்றவை களை வணங்குவதைக் கைவிட வேண்டும் என்னும் கொள்கையின் பக்கம் - அழைப்பதற்காக தொடர்ந்து நபிமார்கள் அனுப்பப்படலாயினர்.

அந்த வரிசையில் இப்ராஹீம் எனும் இறைத்தூதர் வந்தார். அவர் தமது சமுதாயத்தவர்களை சிலை வணக் கத்தை விட்டு விட்டு அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறு அழைத்தார். அவருக்குப் பின் நபித்துவம் அவருடைய மக்களான இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோருக்குக் கிடைத்தது. பின்னர் இஸ்ஹாக்கின் வழித்தோன்றல் களுக்குக் கிடைத்தது. யஃகூப், யூசுப், மூஸா, தாவூத், சுலைமான், ஈஸா (அலை) ஆகியோர் இஸ்ஹாக்கின் வழித் தோன்றல்களில் உள்ள மிகச் சிறந்த நபிமார்களாவர்.

இஸ்ஹாக்கின் வழித்தோன்றல்களில் ஈஸா(அலை) அவர்களுக்குப் பின்னர் எந்த நபியும் வந்ததில்லை. பின்னர் நபித்துவம் இஸ்மாயீல்(அலை) அவர்களின் வழித்தோன்றலுக்குத் திரும்பியது. பிறகு அல்லாஹ் முஹம்மத்(ஸல்) அவர்களை இறுதி நபியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஏனெனில் அவர்களுடைய தூதுத்துவம் இறுதியாகவும் அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட வேதமான குர்ஆன் மனித சமுதாயத்திற்கு இறுதி வேதமாகவும் இருக்க வேண்டும் என்பதே நோக்கம். எனவே தான் அவர்களுடைய தூதுத்துவம் பரிபூரண மானதாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் அரேபியர்களுக்கும் அரேபியர் அல்லாதவர்களுக்கும் பொதுவானதாகவும் எல்லா காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்தமானதாகவும் வந்துள்ளது. அத்தூதுத்துவம் எந்த நன்மையையும் எடுத்துச் சொல்லாமல் இல்லை. எந்தத்தீமையையும் எச்சரிக்காமலில்லை. முஹம்மது (ஸல்) கொண்டு வந்த மார்க்கத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் எவரிடமிருந்தும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான்.